2014 டிசம்பர் 4]

4—

தொழிற்பேட்டை

***36667— திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சங்கரன்கோவில் தொகுதியில் குருக்கள்பட்டியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிட்கோ நிறுவனம்மூலமாக எடுத்து வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் நிரந்தர முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தத் தொழிற்பேட்டை எங்களுடைய பகுதியைச் சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். விவசாயத்தை மட்டுமே முழுமையாக நம்பியிருக்கக்கூடிய மக்கள் இதன்மூலம் மாற்றுத் தொழில் செய்திட இயலும். எனவே, இந்தத் தொழிற்பேட்டையை எங்களுடைய தொகுதிக்கு வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றிகளை, அவர்களுடைய மலர்ப்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். விரைவாக அந்தத் தொழிற்பேட்டையை எங்களுடைய தொகுதி மக்களின் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருக்கள்பட்டி கிராமத்தில் சர்வே எண் 560/1-ல் 68.76 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, வருவாய்த் துறையின் 21-6-2011 தேதியிடப்பட்ட அரசாணையின்படி நில உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. நிலம் சிட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நிலத்திற்கான தொகை முழுவதும் அரசுக்குச் செலுத்தப்பட்டு, தடையின்மைச் சான்று பெற வேண்டிய துறைகளிடமிருந்து, தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளது. நில வரைபடம் தயாரிக்கப்பட்டு, நகர் ஊரமைப்புத் துறையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அம்மா அவர்களுடைய அரசால் சங்கரன்கோவில் தொகுதி, குருக்கள்பட்டியில் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தொகுதி, குருக்கள்பட்டியிலே விரைவாக தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், மனித வளக் குறியீடுகளிலிருந்து மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது அநேகமாக அனைவருக்கும் தெரியும். கடந்த காலத்தில் 2 தொழிற்பேட்டைகள் அமைப்பதாக அறிவிக்கப்பட்டு, எந்தவிதமான கட்டமைப்பும் ஏற்படுத்தாதபட்சத்தில் இன்றைக்கும் படித்த இளைஞர்களுக்கு

வேலைவாய்ப்பு என்பது மிகவும் அரிதாக இருக்கிறது. ஏறக்குறைய 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அந்த மாவட்டத்தில் வாழ்கின்றனர். இரண்டு சர்க்கரை ஆலைகள், 4 தனியார் நூற்பாலைகளைத் தவிர தமிழகத்தில் எந்தத் தொழிற்சாலையுமே இல்லாத ஒரு மாவட்டமாக தருமபுரி மாவட்டம் திகழ்கிறது. ஏற்கெனவே, அங்கு சிப்காட் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, நிலமெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, அது கிடப்பிலே இருக்கிறது. ஆகவே, அறிவிக்கப்பட்ட தொழிற்பேட்டையையாவது உடனடியாகத் தொடங்குவதற்கு அல்லது கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழிற்பேட்டைகள் அறிவிக்கப்பட்டு, தருமபுரி மாவட்டத்திலே கிடப்பிலே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவருடைய நீண்ட கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீண்ட காலம் இடைவெளியாக இருப்பதற்குக் காரணம், சென்ற அரசிலே பல்வேறு நிலைப்பாட்டில் அவர்கள் அறிவிப்புகளோடு நிறுத்திவிட்டார்கள். நிலங்கள் எந்த வகையிலே எடுக்கப்படவேண்டும் என்று கருதாத காரணத்தால், பல தொழிற்பேட்டைகள் எடுக்கப்பட்டு, அவற்றை இன்றைக்கு செயல்படுத்த முடியாத ஒரு சூழல் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லி மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தில், பருவதனஹள்ளி பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 356 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் சிறப்பாகத் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அதேபோன்று, தருமபுரி மாவட்டத்தில், ஈச்சம்பட்டி பகுதியில் 50 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு, அந்தப் பணிகளும் தொடங்கப்பட்டு இருக்கின்றன என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*